| Headline | Police raid Bitcoin mining premises for electricity theft | | |
|---|---|---|---|
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 25 Mar 2021 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 6 |
| ArticleSize | 196 cm² | Journalist | NULL |
| PR Value | RM 3,421 | | |
| | | | |



# வெ.16 லட்சம் மதிப்புள்ள மின்சாரத்தை திருடிய கும்பல் முறியடிப்பு!



(துர்க்கா)

நீலாய், மார்ச் 25-

கண்ணுக்கு தெரியாத வெ.16 லட்சம் மதிப்புள்ள மின்சாரத்தை பிட்கோய்ன் டிஜிட்டல் நாணயத்தை பொருத்தி சூசகமாக திருடி வந்த கும்பலின் நடவடிக்கை முறியடிக்கப்பட்டது.

நீலாய் பண்டார் பாரு மற்றும் என்ஸ்டெக் ஆகிய 9 வர்த்தக வளாகங்களில் நடத்தப்பட்ட அதிரடி சோதனை நடவடிக்கையில் வெ. 16 லட்சம் மதிப்புடைய 581 பிட்கோய்ன் இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக மாவட்ட காவல்துறை தலைவர் சூப்ரிண்டெண்டன் முகமட் பாஸ்லி அப்துல் ரஹ்மான் குறிப்பிட்டார்.

வர்த்தக வளாகங்களை அடையாளம் கண்டு திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்த திருட்டு நடவடிக்கையால் மின்சார வாரியம் கடந்த ஒரு வருடமாக வெ. 21 லட்சம் இழப்பை சந்தித்ததாக அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த இரண்டு வாரங்களாக வளாகத்தின் மேல் தளத்தில் ஜன்னல்கள் திறக்கப்பட்டு இரவில் சத்தம் கேட்டு முறைகேடு நடப்பதை அறிந்து உறுதியானதை தொடர்ந்து டி.என்.பியுடன் இணைந்து இந்த நடவடிக்கை முறியடிக்கப்பட்டது என்றார் அவர்.

நீலாய் வட்டாரத்தில் முதல் முறையாக நடந்துள்ள மின்சார திருட்டு சம்பவம் தொடர்பாக 30 வயதிற்கு உட்பட்ட இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுவதாக போலீஸ் ஓ.சி.பி.டி முகமட் பாஸ்லி அப்துல் ரஹ்மான் மேலும் கூறினார்.

Powered by: isentia